# தனி ஆவர்த்தனம்

**பாடும் ராகத்தை வர்ணித்துப் புரிய வைத்து அந்த மெட்டுல வந்த சினிமா பாடலைப் பாடி ரசிகர்களை தன்வயப்படுத்திக் கொண்டுள்ளார் சாருலதாமணி.**

லஷ்மண் சுருதியின் ஏற்பாட்டில் காமராஜ் அரங்கத்தில் சென்னையில் திருவையாறு இசை நிகழ்ச்சி துவங்கியதிலிருந்து பாப்புலராகி விட்டது. முதலில் சிறியதாக இருந்த கேண்டீன் இப்போது ஃபுட் கோர்ட்டாக வளர்ந்துவிட்டதே சாட்சி! கச்சேரிக்கு காலப்பிரமாணம் முக்கியம். இங்கு 90 நிமிட காலப் பிரமாணம் நல்ல ஃபார்மட்! மதியக் கச்சேரி என்றாலும் ஆர்வமான ரசிகர் கூட்டம். பிருந்தாவன சாரங்கா ராகத்தில் 'ஸ்ரீரங்கபுர விஹாரா' நெஞ்சுருகப் பாடினார். 'பெண்ணொன்று கண்டேன்' 'சோலைக் குயிலே' போன்ற தமிழ்ப்பாடல்களும் சில வரிகள் பாடி கைதட்டுப் பெற்றார். 'சிவ சிவ என ராதா' பந்துவராளி ராக கிருதி. அழகாகப் பாடினார். 'ஏழு ஸ்வரங்களில் எத்தனை ராகம்' 'நின்னைச் சரண் அடைந்தேன்' பாரதியார் பாடல் எல்லாம் பந்துவராளி மெட்டில் சினிமா பாடல்கள். அடுத்து ஜல நாட்டையில் 'எனக்கேதய்யா கதி'. சிவனுக்கு உகந்த ராகம் காம்போஜி 'மா ஜானகி', 'ஓ ரங்க சாயி' பாடல்கள் பிரசித்தம். சீர்காழியின் "அறுபடை வீடு கொண்ட திருமுருகா" காம்போஜி



பூர்ணம் நடராஜ் IPS

ராகப் பாடல் மறக்க முடியுமா! "கல்வியா செல்வமா வீரமா" சரஸ்வதி சபதம் சினிமா பாடலும் காம்போஜி ராகம்தான். முடிவில் பேஹாக் ராக பஜன், மற்றும் 'விட்டலா அபங்கோடு' கச்சேரி நிறைவு செய்தார். 'ஓ ரங்க சாயி' பாடல் ரீங்காரம் இன்னும் ஒலிக்கிறது. 'சாரு மேரு போல்

சாருலதா மணி



உயர்க.'

'யூத் ப்ரிகேடில்' இடம் பெறும் மற்றொரு பாடகி மாளவிகா சுந்தர். போன வருடம் சூப்பர் சிங்கர் போட்டியில் முதல் 10 பாடகர் வரிசையில் தேர்ச்சி பெற்றவர். அழுத்தமான குரல். அவரது மியூசிக் அகாடமி பகல் கச்சேரி கேட்டதில் சந்தோஷம். 'மாருபல்க'

என்ற தியாகராஜர் க்ருதி ஸ்ரீரஞ்சனி மனோரஞ்சகமான ராகம், ருசி குறையாமல் அளித்தார். தீக்ஷிதரின் 'ஸ்ரீமாத்ருபூதம்' கன்னட ராகம் மிஸ்ர ஜாபு தாளம், அசாத்ய திறமையோடு பாடினார். அடுத்து தோடி ராக ஆலாபனை. தியாகராஜரின் 'கொலுவமரகத' கீர்த்தனை. நிரவல்

சாஸ்வதி



**லால்குடியின் சிஷ்யை என்பது ப்ளஸ்பாய்ண்ட்**

கல்பனா ஸ்வரங்கள், நேரம் காரணமாக விரைவில் முடித்துக் கொண்டார். செம்மங்குடி சிஷ்யர் வி.சுப்பிரமணியம் இவரது குரு. தன்னம்பிக்கையோடு பாடுகிறார். பிரசன்னம் முகத்தில் தெரிய வேண்டும். அப்போதுதான் ரசிகர்களோடு இணைய முடியும்.